சுருக்கம்

நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலநீர் வளத்தினை செறிவூட்டும் பெரும்திட்டம் – ரூ. 550 கோடி மதிப்பீட்டில் 3 ஆண்டுகளில் செயல்படுத்துதல் – நிர்வாக ஒப்புதல் – அளிக்கப்படுகிறது.

---

பொதுப்பணி (ஆர்.2)த்துறை

அரசாணை (நிலை) எண். 198 நாள். 10.6.2008
வைகாசி 28,
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க

முதன்மைத் தலைமைப் பொறியாளர், கடித எண்.T6/F.110/AR/2008, நாள்.6.3.2008.

* * * * *

ஆணை:

மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நிலத்தடி நீர் வளங்கள் குறித்து மேற்கொண்ட கணக்கீட்டின்படி, 1992 மற்றும் 2004 ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில், 63 சதவீதமாக இருந்த நிலத்தடி நீரின் உபயோகம், 85 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதுபோன்றே, அதிநுகர்வு மற்றும் அபாயகர நுகர்வு ஒன்றியங்களின் எண்ணிக்கையும், 89லிருந்து 175 ஆக அதிகரித்துள்ளது. மேலும், கடலோரப் பகுதிகளில் அதிநுகர்வின் காரணமாக கடல்நீர் உட்புகுதலும் ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பகுதிகளில் நிலத்தடிநீர் பயன்பாட்டினை கட்டுப்படுத்தி, நிலத்தடி நீர்ச் செறிவினை முறையான நடவடிக்கைகளின் மூலம் பெருகச் செய்து, நிலத்தடி நீர் இருப்பின் நிலைப்புத் தன்மையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. பருவ காலங்களில் பெருமளவில் உபயோகப்படுத்த முடியாதபடி கடலில் கலக்கும் நீர் காப்பாற்றப்பட்டு, நிலத்தடிநீர் செறிவூட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

2. இதனடிப்படையில் சட்டப் பேரவையில் 23.1.2008 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: -

> ‘‘ மேலும் தமிழ் நாட்டில் நீர் பற்றாக்குறைப் பகுதிகளில், வரும் நிதி ஆண்டு முதல் ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் பயன்படுத்தப்படாமல் போகும் நீரினை தடுப்பணைகள் கட்டி நீரினை சேமித்து அதனை ஆண்டு முழுவதும் அப்பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் வேளாண்மை ஆகியவற்றிற்கு பயன்படுத்துவதற்கான “பெருந் திட்டம்” (Master Plan) செயல்படுத்தப்படும்’’

இதன் அடிப்படையில், 2008–09க்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையிலும் இத்திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

3. நீர்வள ஆதாரத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் தலைமையில் தொழில்நுட்பக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்குழு, தமிழ் நாட்டில் 2008–09 முதல் 2010–11 வரையிலான மூன்றாண்டுகளில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டுவதற்காக, ரூ. 550 கோடி மதிப்பீட்டில் பெருந் திட்டம் (Master Plan) ஒன்றை நிலத்தடிநீர் தொடர்புடைய துறைகளான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வேளாண்மை பொறியியல் துறை, வனத்துறை, நீர்வள ஆதாரத் துறை மற்றும் அதன் நிலநீர் பிரிவு ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்துவதற்காக தயாரித்து உள்ளது. இப்பெரும் திட்டத்தினை செயல்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதலை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கோரியுள்ளார். இந்த மூன்று ஆண்டுகளில் துறைவாரியாக செயல்படுத்தப்படவுள்ள பணிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய நிதி குறித்த விவரங்கள் வருமாறு: -

| செயல் படுத்தும் துறை | 2008–09 இலட்சங்களில் | | 2009–10 இலட்சங்களில் | | 2010–11 இலட்சங்களில் | | கூடுதல் இலட்சங்களில் (Total) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதி ஒதுக்கம் |
| தமிழ்நாடு குடிநீர் வழங்கும் வாரியம் (TWAD) | 1200 | 4327.50 | 1000 | 3655.00 | 1050 | 3822.50 | 3250 | 11805.00 |
| வேளாண்மை பொறியியல் துறை | 4319 | 3057.70 | 8639 | 6113.20 | 8639 | 6113.20 | 21597 | 15284.09 |
| வனத் துறை | 8280 | 110.00 | 8122 | 214.40 | 6580 | 204.62 | 22982 | 529.02 |
| நீர்வள ஆதாரத் துறை(WRO) | 112 | 4782.50 | 82 | 8206.90 | 64 | 7248.97 | 258 | 20238.37 |
| நிலத்தடி நீர் துறை | 215 | 2642.65 | 148 | 1826.41 | 250 | 2173.13 | 613 | 6642.20 |
| மொத்த கூடுதல் | 14126 | 14920.35 | 17991 | 20015.91 | 16583 | 19562.42 | 48700 | 54498.68 |

திட்ட மதிப்பீட்டுத் தொகை : ரூ. 544.99 கோடி

செயல் திறன் கண்டறிதல்
மற்றும் சில்லரைச் செலவினங்கள் : ரூ. 5.00 கோடி
மொத்தம் ரூ. 549.99 கோடி

அல்லது 550 கோடி (நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பெருந் திட்டம் ரூ. 565 கோடியிலிருந்து ரூ. 550 கோடியாக குறைக்கப்படுதல்).

4. முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது:-

(I) தமிழ் நாட்டில், 2008–2009 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில், மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து, செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்திற்கான, ரூ. 550.00 கோடி (ரூபாய் ஐநூற்று ஐம்பது கோடி மட்டும்) மதிப்பீட்டிலான பெருந்

திட்டத்தினை (Master Plan), நிலத்தடிநீர் தொடர்புடைய துறைகள் செயல்படுத்த, அரசு நிர்வாக ஒப்புதல் வழங்குகிறது.

(II) அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது **2009–2010** மற்றும் **2010–2011**க்கான செயல் திட்டத்திற்கு (Action Plan) உரிய மாற்றங்கள் தேவைப்படின், அதற்கேற்றார் போல் மாற்றியமைக்க, தலைமைப் பொறியாளர் (நில நீர்) அவர்களுக்கு அறிவுரைகள் வழங்குகிறது.

(III) ரூபாய் ஒரு கோடிக்கு மேற்பட்ட ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான விரிவான திட்ட மதிப்பீட்டினைப் சம்பந்தப்பட்ட துறைகள் பெற்று, நிதித் துறையின் இசைவோடு, நிர்வாக ஒப்புதல் வழங்க வேண்டும். ரூபாய் ஒரு கோடி மதிப்பிற்குட்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை, ஒரே தொகுப்பாகப் பெற்று, நிதித்துறையின் இசைவோடு சம்பந்தப்பட்ட துறைகள், நிர்வாக ஒப்புதல் வழங்க வேண்டும்.

(IV) நடப்பு நிதியாண்டிற்கென **(2008–09)** ரூ **100** கோடி (ரூபாய் நூறு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், பணிகளை மேற்கொள்ள துறைவாரியாக, பின்வருமாறு, நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது: -

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (அ) | நீர்வள ஆதாரத்துறை | **48.00** |
| (ஆ) | நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் (நீர்வள ஆதாரத் துறை) | **2.00** |
| (இ) | குடிநீர் வடிகால் வாரியம் | **24 .00** |
| (ஈ) | வேளாண்மை பொறியியல் துறை | **25 .00** |
| (உ) | வனத்துறை | **1.00** |
| | மொத்தம் | **100.00** |

(V) திட்டம் குறித்த ஒருங்கிணைந்த அறிக்கையை தயாரிக்கும் பொருட்டு, புள்ளி விவரங்களை, சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தலைமைப் பொறியாளர் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் (நீர்வள ஆதாரத் துறை), சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(VI) இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், திறம்பட செயல்படுத்துவது குறித்து கண்காணிக்க, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழுவினை அமைக்க, அரசு ஆணை வெளியிடுகிறது. இக்குழு குறைந்த பட்சம் **3** மாதங்களுக்கு ஒருமுறை கூடி ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**5.** மேலே பத்தி **4**–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>வரவு – செலவு திட்ட வெளியீடு – 40:</u>

(அ) நீர்வள ஆதாரத் துறை – ரூ. **48. 00** கோடி

“**4702–00**–சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு–**102.** நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத்திட்டம் –JC.மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புத் திட்டம் – **16.** பெரும் பணிகள்”. (த. தொ.கு.**4702–00–102–JC–1601**)

<u>வரவு – செலவு திட்ட வெளியீடு – 40:</u>

(ஆ) நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் (நீர்வள ஆதாரத் துறை) – ரூ. 2.00 கோடி

" 4702.00. சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 102. நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – JD. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு திட்டம்–16. பெரும்பணிகள்

(த.தொ.கு.4702–00–102–JD-1609).

<u>வரவு – செலவு திட்ட வெளியீடு – 34:</u>

(இ) குடிநீர் வடிகால் வாரியம் – ரூ. 24.00 கோடி

"4215. குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு–01. குடிநீர் வழங்கல்–102. ஊரக குடிநீர் வழங்கல்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II. மாநிலத் திட்டம் – JH. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புத் திட்டம்–16. பெரும் பணிகள்''.

(த. தொ.கு.4215–01–102–JH–1600)

<u>வரவு – செலவு திட்ட வெளியீடு – 5:</u>

(ஈ) வேளாண்மை பொறியியல் துறை – ரூ. 25.00 கோடி

"4402–00. மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு – 102. மண்வளப் பாதுகாப்பு– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II. மாநிலத் திட்டம் – JO. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புத் திட்டம்–16. பெரும் பணிகள்".

(த. தொ.கு.4402–00–102–JO–1600)

<u>வரவு – செலவு திட்ட வெளியீடு – 15:</u>

(உ) வனத்துறை – ரூ. 1.00 கோடி

"4406. காடு வளர்ப்பு, வனவிலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு–01. காடு வளர்ப்பு–101. வனப் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மீண்டும் காடு வளர்ப்பு–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II. மாநிலத் திட்டம்–JD. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புத் திட்டம்–16. பெரும் பணிகள்".

(த. தொ.கு.4406–01–101–JD–1609)

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 233/DS(AR)/ 2008-1, நாள் 10.6.2008 ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

எஸ். ஆதிசேஷையா
அரசு செயலாளர்

பெறுநர்

முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை (ம) தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித் துறை, சென்னை – 5.

தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை – 113.

தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை – 5.
நிர்வாக இயக்குநர், குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, சென்னை–35.
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், வனத்துறை, சென்னை – 6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
தலைமைப் பொறியாளர், திருச்சி மண்டலம், திருச்சி.
தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை.
தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், கோவை.
தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை – 5.
செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை – 9.
செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை – 9.
மாநில கணக்காயர், சென்னை – 9 / 18 / 35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்.
நகல்
நிதித்துறை, (பொ.ப.II)/வேளாண்மை/சுற்றுச் சூழல் மற்றும் வனம்/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) சென்னை – 9
அனைத்து பிரிவுகள், பொதுப்பணித்துறை.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்